## தலைப்பு 268 - கிளிநொச்சி மாவட்டச் செயலகம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடக்கிய பொழிப்பு அறிக்கை 2019 மே 29 இல் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டிருந்தது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 யூலை 31 இல் வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக்குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் நிதி நிலமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலமையைப் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய

வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் பிரகாரம் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற்கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது என மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தர் தெரியப்படுத்தியிருந்தார்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் இலக்க பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயத்தினை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தினால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் தொகைகளுடன் ஒப்பிடப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. எனினும் கணக்காய்வுக்கு முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் உரிய முறையில் தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எனவே முன்னைய ஆண்டிற்குரிய தொகைகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியாதுள்ளன.

(ஆ) மாவட்ட செயலகத்தினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடொன்று இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்குகளைச் சமர்ப்பித்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று** | | |
| 2017 யூலை 05 ஆந் திகதிய 256/2017 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 26801 ஆம் விடய இலக்க அரசாங்க | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. |

| | |
|---|---|
| உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்கு 2019 பெப்ரவரி 28 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அது 02 மாத கால தாமதத்தின் பின்னர் 15 மே 2019 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய இணக்கக் கூற்றுக்களை கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.6.2 நிதிக்கூற்றுக்கள் தயாரித்து அளித்தல் தொடர்பான சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை**

2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அத்தேவைப்பாடுகளிலிருந்து விலகியிருந்த சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | அரச கணக்குகள் திணைக்களத்தினால் 21 நவம்பர் 2018 திகதியிடப்பட்ட சுற்றறிக்கை 267/2018 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் குறிப்பு (iii) இன் கீழான கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகளின் கூற்றுக்கள் திறைசேரியின் ஒவ்வொரு செலவவினத் தலைப்புகளுக்கும் உரியதாக வெளியிடப்படுகின்ற கடப்பாடுகள் மற்றும் பொறுப்பு கூற்றுகளுடன் உடன்பட வேண்டும். எனினும் திறைசேரியின் பொறுப்புக் கூற்றிலுள்ள ரூபா 442,488 தொகையான பொறுப்புக்கள் கிளிநொச்சி மாவட்ட செயலக நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதனால் பொறுப்புக்கள் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | பொருத்தமான சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகள் தெளிவாக பொருள்கோடல் செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். | குறித்த தொகை குறிப்பு iv உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் நிதிக் கூற்றில் குறிப்பு III இல் மேற்படி ரூபா 442,488 தவறுதலாக உள்வாங்கப் படவில்லை. இனிவரும் காலங்களில் இவ்வாறான தவறுகள் இடம் பெறாது இருப்பதற்குரிய அறிவுறுத்தல்கள் உரிய அலுவலர்களுக்கு வழங்கப்பட்டடுள்ளது |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 106 மற்றும் 113 இன் கீழான நட்டங்களில் தொடர்ந்தும் அறவிடுவதற்கு, வெட்டி நீக்குவதற்கு, கைவிடுவதற்கு இருக்கின்ற நட்டம் பற்றிய கூற்றில் ரூபா 72,841,466 பெறுமதியிலான 41 நிகழ்வுகளின் விடயங்கள் மீளாய்வாண்டில் | கணக்குகளிற்கு உட்படுத்த வேண்டிய பெறுமதிகள் தொடர்பாக ஒவ்வொரு நிதியாண்டுக்குமான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் | தவறுதலாக உள்வாங்கப்படவில்லை எனினும் அடுத்த ஆண்டிற்கான நிதிக்கூற்றில் மேற்படி தொகை உள்வாங்குவது உறுதிப்படுத்தப்படும். |

| | |
|---|---|
| புத்தகங்களில் வெட்டி நீக்கப்படாது இருந்த போதிலும் நிதிக்கூற்றில் குறிப்பு (i) இன் மூலம் கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | போது முன்னைய ஆண்டு நிதிக்கூற்றுக்களுடன் ஒப்பீடு செய்யப்படல் வேண்டும். |

## 1.6.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

### (அ) மூலதனச் செலவினங்கள்

நிதிக்கூற்றுக்களுக்குரிய மூலதனச் செலவினங்களை கணக்கீடு செய்யும் போது கீழே காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (i) | மிளாகாய் செய்கைக்கான தூவல் நீர்ப்பாசனத்தொகுதியின் கொள்வனவிற்காக ரூபா 5,589,000 பெறுமதியில் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. 31 திசெம்பர் 2018 இல் வேலைகள் நிறைவு செய்யப்பட்டதாகக் குறிப்பிட்டு காசோலைகள் வரையப்பட்டிருந்த போதும் ரூபா 1,701,000 பெறுமதியான 02 காசோலைகள் 13 மே 2019 வரை வேலை நிறைவுசெய்யப் பட்டிருக்காமையால் உரிய ஒப்பந்ததாரருக்கு வழங்கப்படாமல் இருந்தது. | வேலைகள் நிறைவடைந்த பின்னரே கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | உரிய வழங்குனரால் பொருட்கள் வழங்கப்பட்டு உரிய பயனாளிகளிற்கு தூவல் நீர்ப்பாசன தொகுதி பொருத்தப்பட்டுள்ள போதும் அது சம்பந்தமான பாவனை விளக்கவுரைகள் வழங்கப்படாமையால் காசோலைகள் வழங்கப்படாமல் இருந்தது. தற்போது செயல்திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. |
| (ii) | பூநகரி பிரதேச செயலகத்திற்கான வாகனத்தரிப்பிட நிர்மாணத்திற்காக ரூபா 2,357,425 பெறுமதிக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. 31 திசெம்பர் 2018 இவ்வேலைகள் நிறைவு செய்யப்பட்டதாகக் குறிப்பிட்டு 01 காசோலை வரையப்பட்டிருந்த போதும் 15 மார்ச் 2019 வரை வேலை நிறைவு செய்யப்பட்டிருக்காமையால் ரூபா 548,554 பெறுமதியான 01 காசோலை 13 மே 2019 வரை உரிய ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | வேலைகள் நிறைவடைந்த பின்னரே கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | வேலை நிறைவேற்றப்பட்டு காசோலை வழங்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (iii) | பூநகரி பிரதேச செயலகத்திற்கான சிற்றுண்டிச்சாலை நிர்மாணத்திற்காக ரூபா 4,681,811 பெறுமதிக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. 31 திசெம்பர் 2018 இல் வேலைகள் நிறைவு செய்யப்பட்டதாகக் குறிப்பிட்டு 01 காசோலை வரையப்பட்டிருந்த போதும் 15 மார்ச் 2019 வரை வேலை நிறைவு செய்யப்பட்டிருக்காமையால் ரூபா 239,974 பெறுமதியான 01 காசோலை 13 மே 2019 வரை உரிய ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | வேலைகள் நிறைவடைந்த பின்னரே கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | வேலை நிறைவேற்றப்பட்டு காசோலை வழங்கப்பட்டுள்ளது. |
| (iv) | கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் அலுவலர் கூட்டுவிடுதி நிர்மாணத்திற்காக ரூபா 17,597,100 பெறுமதியில் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. 31 திசெம்பர் 2018 இவ்வேலைகள் நிறைவு செய்யப்பட்டதாகக் குறிப்பிட்டு 02 காசோலைகள் வரையப்பட்டிருந்த போதும் 14 மே 2019 வரை வேலை நிறைவு செய்யப்பட்டிருக்காமையால். ரூபா 11,295,101 பெறுமதியான 02 காசோலைகள் 13 மே 2019 வரை உரிய ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | வேலைகள் நிறைவடைந்த பின்னரே கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | நடவடிக்கை மேற்க்கொள்ளப்பட்டுள்ளது. |

--------------

நிதிக்கூற்றுக்களுக்குரிய வைப்புக்கள் கொடுப்பனவு மற்றும் மீதிகள் கணக்கீடு செய்யும் போது கீழே காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரைகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** |
|---|---|---|---|
| (i) | 2018 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான வைப்புக்கணக்குகளின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 64,306,048 ஆகவும் திறைசேரிப் புத்தகங்களில் உள்ளவாறான மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 61,822,697 ஆகவும் காணப்படுகின்றது. | மீதிகள் இணங்க வேண்டும் | பதிலளிக்கப் பட்டிருக்கவில்லை |

| | | | |
|---|---|---|---|
| (ii) | கிளிநொச்சி மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் இரண்டு வருடங்களிற்கு மேற்பட்ட ரூபா 1,575,494 கூட்டுத்தொகையான வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 571 படி நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். | மேற்படி வைப்புக்கள் தொடர்பாக உரிய நிதிப் பிரமாணங்களுக்கு ஏற்ப தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது |
| (iii) | கிளிநொச்சி மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் ஏனைய அமைச்சு மற்றும் திணைக்களங்களால் பல்வேறு பணிகளுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 3,091,377 தொகையான பணம் குறித்த பணிகளை நிறைவு செய்யாது வைப்புக்கணக்கில் முடக்கப்பட்டிருந்தது. | ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட பணத்தினை உரிய காலத்தில் குறித்த பணிகளை நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | உரிய நோக்கங்கள் நிறைவடைந்ததும் உரிய வைப்புக்கள் விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

**(இ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றை கணக்கீடு செய்யும் போது கீழே காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலையான சொத்துக்களாக நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ள ஆரம்ப மீதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள சொத்துக்களை தனித்தனியாக மெய்மையாய்வு செய்யக்கூடிய வகையில் பதிவேடுகள் பேணப்படாமையினால் கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்குரிய சொத்துக்கள் அனைத்தும் நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளனவா என்பதனை திருப்திகரமாக பரீட்சிக்க முடியாமல் உள்ளது. | மீதிகளை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் பதிவேடுகள் தனித்தனியாக பேணப்படவேண்டும் | சிகாஸ் கணக்கு பொதியினூடாக சீராக்கப்பட்டு வருகின்றது. இனி வருங்காலங்களில் தனித்தனியாக பதிவேடு பேணுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது |

## (ஈ) முற்பணக் கணக்கு மீதிகள்

முற்பணக் கணக்குகளில் ஆண்டின் இறுதியிலான மீதிகளை கணக்கீடு செய்யும் போது கீழே காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணைக்கக்கூற்றின் பிரகாரம் பதவியிலிருந்து விலகிய, நீக்கப்பட்ட மற்றும் ஒய்வு பெற்ற உத்தியோகத்தர்களின் அறவீடுகள் நிலுவையாகவிருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 889,765 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகளில் ரூபா 644,195 ஆனவை 09 தொடக்கம் 15 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் இவ் நிலுவை மீதிகளை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் நலிவான மட்டத்தில் காணப்பட்டது. | நிலுவை மீதிகளை அறவிட ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதிவழித்தலுக்கான தொடர் நடவடிக்கைகள் ஆக்கபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டு தற்போது நிறைவடையும் நிலையில் காணப்படுகின்றது. |

## (உ) கட்டுநிதி மீதிகள்

கட்டுநிதி மீதிகளை கணக்கீடு செய்யும் போது கீழே காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டுக்காக சமர்ப்பிக்கப்பட்ட காசுப்பாச்சல் கூற்றில் (ACA - C) வெளிப்படுத்தப்பட்டுள்ள மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (Non revenue receipt) ரூபா 1,327,318,740 ஆகவும் பணி முற்பணக்கணக்கின் (ACA - 3) படியான மொத்த பெறுகை ரூபா 1,328,093,132 ஆகவும் காணப்படுகின்றது. இதன் காரணமாக ரூபா 774,392 வேறுபாடு காணப்படுகின்றது. | நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் பொழுது அனைத்து மீதிகளும் இணக்கப்பட்டிருத்தல் வேண்டும். | திறைசேரியிலிருந்து மாவட்ட செயலகத்தால் பணி முற்பணம் பெறப்பட்டு பிரதேச செயலகங்களிற்கு கட்டுநிதி வழங்கப்படுகின்றது பிரதேச செயலகங்கள் இக்கட்டு நிதியிலிருந்து கொடுப்பனவை மேற் கொண்ட பின்னர் வருட இறுதியில் மீதியாகக் காணப்படும் பணி முற்பணம் மாவட்ட செயலகத்திற்கு மீளத் திருப்பப்படுகின்றது. இவ்வாறாக பிரதேச செயலகங்களிருந்து மீளப்பெறப்பட்ட உப கட்டு நிதிக்கான மீளப்பெறப்பட்ட காசுக்பெறுகைகள் ரூபா 566,892 ம் காசுப்பாய்ச்சல் கூற்றில் மொத்த வருமானம் அல்லாத பெறுகையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. |

## (ஊ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தால் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிருக்காதது சில தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(i) பிணைகள் பதிவேடு** | | |
| நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்கள் உள்ளடங்கிய பிணைகள் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 891(1) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உள்ளடங்கும் விதத்தில் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பான பிணைகள் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். | பிணைகள் பதிவேடுகள் பேணப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் படுகிறது. |
| **(ii) வருமான பதிவேடுகள்** | | |
| மீளாய்வாண்டுக்காக உத்தியோகத்தர்களிடமிருந்து அறிவிடப்பட்ட வாடகைகள் அறவீடு தொடர்பாக பரீட்சிக்கக்கூடிய வகையில் எந்தவொரு பதிவேடுகளும் பேணப்பட்டிருக்கவில்லை. | வாடகை அறவீடுகள் தொடர்பாக பதிவேடு பேணப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | வதிவிட வாடகைகள் அறவீடு சம்பந்தமான பதிவேடு 2019 ம் ஆண்டு முதல் முறையாக பேணப்படுகின்றது. |

## (எ) கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் கணக்காய்வு சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிச்செயலாற்றுகை கூற்றில்(ACA - F) பணி முற்பண மீதி ரூபா 903,856,837 | எல்லா பெறுமதிகளையும் | திறைசேரி அச்சிடல் படிவங்கள் அவ்வவ் |

| | | |
|---|---|---|
| வெளிப்படுத்தப்பட்டிருந்த போதும் இக் கட்டுநிதியில் இருந்து ஏனைய அமைச்சுகளிற்கு திணைக்களத்தின் பொருட்டு ஏற்படுத்தப்பட்ட செலவினங்களாக தாக்கல் செய்யப்பட்ட ரூபா 904,772,922 தொடர்பான திறைசேரி அச்சிடல் மாதிரி இலக்கம் BTBL 31 மற்றும் BTBL 67 இன் படிவ பிரதி ஆவணங்கள் எவையும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இணங்கச் செய்யக்கூடிய வகையில் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | அமைச்சிற்கே திறைசேரியால் அனுப்பி வைக்கப்படும் நிதிச்செலாற்றுகை கூற்றில் எமது மாவட்ட செயலக சிகாஸ் இல் கிடைக்கப்பெறும் செலவு பொழிப்பறிக்கையில் உள்ளபடியான தொகையே உள்வாங்கப்பட்டுள்ளது. |

**(ஏ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **பெறுமதி** | **இணங்காமை** | | |
| | ரூபா | | | |
| **திறைசேரி சுற்றறிக்கை** | | | | |
| (i) 2015 யூலை 14 ஆம் திகதிய 03/2015 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கை | 1,433,372 | பணி நிறைவு செய்யப்பட்டு 10 நாட்களுக்குள் பெற்றுக்கொண்ட செயல் நிமித்த உபகட்டுநிதி தீர்க்கப்பட வேண்டிய போதிலும் 25 சந்தர்ப்பங்களுக்கு உரியதாக வழங்கப்பட்டிருந்த ரூபா 1,433,372 கூட்டுத்தொகையான செயல் நிமித்த உபகட்டுநிதி 31 நாட்கள் தொடக்கம் 179 நாட்கள் வரையான காலதாமதத்தின் பின்னர் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது. | உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | இனி வருங்காலங்களில் உரிய நிதிப்பிரமாணம் சுற்றுநிருபங்களிற் கமைய உரிய காலத்தில் மீளளிப்பது உறுதிப்படுத்தப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) 2015 யூலை 14 ஆம் திகதிய 03/2015 ஆம் இலக்க பொதுநிதி சுற்றறிக்கை | 5,891,651 | 2015 யூலை 14 ஆம் திகதிய 03/2015 ஆம் இலக்க பொதுநிதி சுற்றறிக்கையால் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 371(5) இற்கமைய பணி நிறைவு செய்யப்பட்டு 10 நாட்களுக்குள் பெற்றுக்கொண்ட செயல்நிமித்த உபகட்டுநிதி தீர்க்கப்பட வேண்டிய போதிலும் கரைச்சிப் பிரதேச செயலகத்தினால் 11 சந்தர்ப்பங்களுக்குரியதாக வழங்கப்பட்டிருந்த ரூபா 5,891,651 கூட்டுத்தொகையான செயல்நிமித்த உபகட்டுநிதி 37 நாட்கள் தொடக்கம் 143 நாட்கள் வரையான காலதாமதத்தின் பின்னர் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது. | உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | இனிவருங் காலங்களில் உரிய நிதிப்பிரமாணம் சுற்றுநிருபத்திற்கமைய உரிய காலத்தில் மீளளிப்பு உறுதிப்படுத்தப்படும். |

**(ஐ) மோசடித் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட மோசடித் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தினால் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியின் 2017 ஏப்ரல் 07 திகதியிடப்பட்ட 2017/5 சுற்றுநிருபத்திற்கமைய எல்.பி.கேஸ் சிலிண்டர் தொகுதியை வழங்குதல் திட்டத்தின் கீழ் பூநகரி சமுர்த்தி வங்கி, கிளிநகர் சமுர்த்தி வங்கி, வட்டக்கச்சி சமுர்த்தி வங்கி என்பவற்றில் முறையே ரூபா 63,270, ரூபா 456,650¸ ரூபா 142,274, பெறுமதியான எல்.பி.கேஸ் சிலிண்டர் தொகுதிகளும் அன்பளிப்பு வவுச்சர்களும் வழங்குனர்களிடமிருந்து நன்கொடையாகக் கிடைத்திருந்தன. இவற்றை இலங்கை சனநாயக சோசலிசக்குடியரசின் தாபன விதிக்கோவை XXXII பிரிவு 2.1 இற்கு மாறாக முறையில் சமுர்த்தி அலுவலகர்களிற்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. | தாபன விதிக்கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | உரிய அலுவலர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

## 2. செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 பணி செயற்பாடுகளை நிறைவேற்றாமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| மாவட்டச் செயலகம் மற்றும் அதன் கீழான 04 பிரதேச செயலகங்களினால் 31 திசெம்பர் 2018 இல் ரூபா 44,794,141 பெறுமதியான 68 காசோலைகள் வேலை முடிவுற்றதாகக் குறிப்பிடப்பட்டு வரையப்பட்டிருந்தன. எனினும் குறித்த காசோலைகள் 10 ஏப்ரல் 2019 வரை குறிப்பிட்டவர்களிற்கு வழங்கப்படாமல் குறித்த செயலகங்களில் உள்ளதுடன் நிதிப்பிரமாணப்படி எவ்வித தொடர் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதனால் அரச நிதி வினைத்திறனான முறையில் பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் நிதிப்பிரமாணம் 137 மற்றும் 138 ற்கு முரணாக செயற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டிருந்தது. | முடிவுறாத வேலைகளுக்கு காசோலைகள் எழுதும் நடைமுறைகள் தவிர்க்கப்பட வேண்டும். | முடிவுறாத வேலைகள ரூபா 520,873 Arbitration இற்கு உட்படுத்தப்பட்டுள்ளது, ரூபா 283,232 வருமானத்திற்கு மாற்றப்பட்டுள்ளது, ரூபா 1,258,269 வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்ட்டுள்ளது.<br><br>__கண்டாவளை பிரதேச செயலகம்-__<br>08 காசோலைகள் உரியவர்களிற்கு வழங்கப்பட்டுள்ளது. 02 காசோலைகள் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.<br><br>__பூநகரி பிரதேச செயலகம்-__<br>அனைத்து காசோலைகளும் உரியவர்களிற்கு வழங்கப்பட்டுள்ளது.<br><br>__பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம்-__<br>09 காசோலைகள் உரியவர்களிற்கு வழங்கப்பட்டுள்ளது 03 காசோலைகள் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.<br><br>__கரைச்சி பிரதேச செயலகம்__<br>காசோலைகள் அனைத்தும் உரியவர்களிற்கு வழங்கப்பட்டுள்ளது. |

### 2.2 பெறுகைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | தேசிய பெறுகை முகவர் நிலையத்தின் பெறுகை கைந்Ál லின் 15 மார்ச் 2017 திகதிய பிற்சேர்கை இலக்கம் 31 பந்தி 4.2.3 இல் | பெறுகை வழிகாட்டல் பின்பற்றப்படல் வேண்டும் | பெறுகைக்குழு உறுப்பினர்களின் வேலைப்பழு மற்றும் உறுப்பினரில் ஒருவர் வெளித்திணைக்கத்தில் கடமையாற்றுவதனால் பெறுகைகுழு கூட்டங்கள் கூட்டுவதில் |

| | | | |
|---|---|---|---|
| | பெறுகைக்கால அட்டவணையில் கூறப்பட்டதன் பிரகாரம் ஆகக்கூடிய காலம் 4 வாரங்களுக்குள் விலைக்கேள்வி சமர்ப்பிக்கும் கட்டாய காலப்பகுதி 02 வாரங்களுக்குள்ளும் இருக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் மாவட்டச் செயலகத்தின் 21 வேலைத்திட்டங்கள் காலதாமதத்துடன் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு ஏற்றுக்கொள்ளல் கடிதம் வழங்கப்பட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தது. | | காலதாமதங்கள் ஏற்பட்டமையால் தீர்மானங்கள் வழங்கப்பட்டு ஏற்றுக்கொள்ளல் கடிதம் சமர்ப்பிப்பதில் ஏற்படும் தாமதங்கள் காரணத்தாலும், உரிய காலத்தில் ஒப்பந்தம் செய்வதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. |
| (ஆ) | 10 மில்லியனுக்கு குறைவான வேலைகளுக்காக ICTAD/SBD/03 பயன்படுத்தும் போது CIDA பதிவானது விலைக்கேள்விச் செல்லுபடிக்காலம் முழுவதும் செயற்பாட்டில் காணப்பட வேண்டும் என்பதுடன் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் தீர்மானம் மேற்கொள்ளப்படும் போது ஆரம்பக் கட்ட மதிப்பீட்டின் போது CIDA பதிவினை பரீட்சிக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் CIDA பதிவு முதிர்வடைந்திருந்த ரூபா 2,958,364 தொகையான 02 வேலைத்திட்டங்களிற்கும் CIDA பதிவு சமர்ப்பிக்கப்படாத ரூபா 4,120,000 02 வேலைத்திட்டங்களிற்கும் ஒப்பந்ததாரருக்கு ஒப்பந்த வேலை வழங்கப்பட்டிருந்தது. | ICTAD பதிவு செயல்வலுவில் உள்ளதை உறுதி செய்தல் வேண்டும். | தொழில் நுட்ப குழுவினால் WWW.cide.gov.lk இணையத்தளத்தினுடாக செவ்வை பார்க்கப்பட்ட போது குறித்த கேள்விதாரரின் CIDA புத்தகம் புதுப்பிக்கப்பட்டு காணப்பட்டமையினாலேயே மதிப்பீட்டின் போது ஒப்பந்ததாரரின் விலைக்கேள்வி மதிப்பிடப்பட்டு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. |
| (இ) | பெறுகை வழிகாட்டல் பந்தி 8.7 இன் பிரகாரம் விலைக்கேள்வியின் செல்லுபடிக்காலப்பகுதியினுள்ளும் ஒப்பந்த அளிப்பின் இறுதித் தீர்மானம் பூர்த்தி செய்யப்பட்டவுடனும் ஒப்பந்த அளிப்பு செய்யப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதும் ரூபா 4,550,000 பெறுமதியான வேலைத்திட்டமொன்று விலைக்கேள்வி செல்லுபடிக்காலம் முடிவடைந்த பின் 22 நாட்கள் கால தாமதத்துடன் ஏற்றுக்கொள்ளல் கடிதம் அனுப்பப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தமானது விலைக்கேள்வி பிணைப்பொறுப்பு முடிவடைந்த பின் மேற்கொள்ப்பட்டிருந்தது. | விலைக்கேள்வி பிணைப்பொறுப்பு செயலில் உள்ள போதே ஒப்பந்தம் மேற்கொள்ள வேண்டும் | கேள்வி ஆவணங்கள் தெளிவின்மையால் கேள்வித்தீர்மானம் தொடர்பில் கேள்விச்சபை 3 தடவைகளுக்கு மேல் கூட வேண்டி ஏற்பட்டுள்ளமையால் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. |

## 2.3 அரச உத்தியோகத்தர்களின் பிணை வைப்பு

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) நிதிப்பிரமாணம் 880 இன் படி பிணைப் பணம் செலுத்த வேண்டிய சகல உத்தியோகத்தர்களிடமிருந்தும் பிணைப்பணம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உரிய அலுவலரிடம் பிணைப்பணம் அறவிடப்படல் வேண்டும் | பிணைப்பணம் அறவிடப்படாத அலுவலர்களிடம் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (ஆ) நிதிப்பிரமாணம் 881 (i) இன் பிரகாரம் பிணைப்பணம் செலுத்த வேண்டிய ஒரு பதவிக்கு நியமிக்கப்படும் உத்தியோகத்தர் ஒருவர் நியமனத்திகதியிலிருந்து அல்லது அத்தகைய பதவிக்கான இடமாற்றத்திகதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் பிணைப்பணம் செலுத்துதல் வேண்டும். மூன்று மாதங்களுக்குள் தேவையான பிணைப்பணம் செலுத்தத் தவறும் சந்தர்ப்பத்தில் உத்தியோகத்தர் வேதனம் நிறுத்தி வைக்கப்படல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதும் மாவட்ட செயலகத்தினால் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 881(i) பின்பற்றப்பட வேண்டும் | பிணைப்பணம் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (இ) நிதிப்பிரமாணம் 881(ii) இன் பிரகாரம் திணைக்களங்களின் தலைவர்கள் பிணைப்பணம் செலுத்த வேண்டிய தமது கீழ்நிலை உத்தியோகத்தர்கள் விதித்துரைத்த காலப் பகுதியினுள் அதனைச் செலுத்துவதை உறுதிப்படுத்தல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதும் இது தொடர்பில் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 881(ii) பின்பற்றப்பட வேண்டும் | நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

## 2.4 நட்டங்களும் சேதங்களும்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| விபத்துக்களினால் ஏற்பட்ட 05 வாகனங்களுக்குரிய நட்டங்களிற்கு காப்புறுதி மூலம் ஈடுசெய்யப்பட்ட | விபத்துகளினால் ஏற்பட்ட நட்டங்கள் கணக்குகளில் | இனி வரும் ஆண்டு கணக்கறிக்கையில் உள்வாங்க நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| தொகைகள் தவிர மிகுதித் தொகை ரூபா 1,621,201 நட்டங்களாக 01 தொடக்கம் 07 ஆண்டுகளுக்கு மேலாக கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எடுக்கப்படும். |

## 2.5 முகாமைத்துவ பலவீனங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்த கணக்காய்வு பந்திகளின் பின்தொடர் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாத பந்திகளுடன் தொடர்புபடுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. | | | |
| (i) | கண்டாவளை பிரதேச செயலக கட்டடம் அமைத்தல் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | கட்டட வேலைகள் முடிவுறுத்தப்படல் வேண்டும். | கண்டாவளை கட்டட நிர்மாண வேலைகள் முடிவுறும் நிலையிலுள்ளது. |
| (ii) | ஒப்பந்த வேலைகளுக்குரிய மேலதிக கொடுப்பனவுகளின் கூட்டுமொத்தம் ரூபா 686,492 தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேலதிக கொடுப்பனவு அறவிடப்பட வேண்டும் | சோரன்பற்று வீதி மேலதிக கொடுப்பனவு பிடிபணத்திலிருந்து அறவிடப்பட்டுள்ளது. சித்தப்பா கடை வீதி வேலைத்திட்டத்திற்கான மேலதிக கொடுப்பனவு ரூபா 22,21,619 பிடி காசிலிருந்து அறவிடப்பட்டுள்ளது. மிகுதி கொடுப்பனவை சீர் செய்யுமாறு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. |
| (iii) | 8 ஏப்ரல் 2014 இல் நடைபெற்ற பாராளுமன்ற பொதுக்கணக்குகள் குழுவின் கட்டளைகளுக்கு இணங்க நாளதுவரை ரூபா 4.225 மில்லியன் தீர்க்கப்படாத நெற்கொள்வனவு முற்பணங்கள் முழுமையாக அறவிடப்பட்டிருக்கவில்லை. | முற்பணங்கள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும் | தற்போது 4,125,000 நிலுவையாக உள்ளது. மாதாந்த தவணை அடிப்படையில் அறவீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. |
| (iv) | மாசார் கொல்லக்குறிச்சி உவர்நீர் தடுப்பணை வேலைத்திட்டங்கள் ரூபா 1,554,000 பெறுமதியான நாளதுவரை முழுமைப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | திட்டம் முழுமைப்படுத்தப்பட வேண்டும் | மாசார் வேலைத்திட்டத்தின் முடிவுறுத்தப்பட்ட வேலைகளிற்கே கொடுப்பனவு வழங்கப்படுவது என விவசாய திணைக்களத்தின் தீர்மானத்திற்கேற்ப காசோலை வரையப்பட்டது. எனினும் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளமைக்கான அறிக்கை விவசாய |

| | | | |
|---|---|---|---|
| | | | திணைக்களத்திலிருந்து கிடைக்கப்பெறாமையால் காசோலையானது வருமான கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது. |
| (v) | மாவட்ட செயலகத்தினால் கண்டாவளை பிரதேச செயலகத்தின் கட்டட நிர்மாணத்திற்கென 2017 ஆம் ஆண்டு கட்டடங்கள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 20 மில்லியன் வேலைத்திட்டம் நாளதுவரை முழுமைப் படுத்தப்பட்டிருக்கவில்லை. | வேலைத் திட்டங்கள் முழுமைப்படுத்தப்படல் வேண்டும் | கண்டாவளை பிரதேச செயலக நிர்மாண வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்து மிகவிரைவில் பொதுமக்களின் பாவனைக்காக கையளிக்கப்படும். |
| (vi) | கண்டாவளை பிரதேச செயலகத்தின் வாகனம் 2017 யூன் 16 ஆம் திகதி விபத்துக்குள்ளாகியமை தொடர்பாக ரூபா 1,348,904 செலவு ஏற்பட்டிருந்தது. இது தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நாளதுவரை நடவடிக்கை முழுமைப் படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின்படி உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | விசாரணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. விசாரணை அறிக்கை பெற்று விரைவில் தொடர் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (vii) | பதவியினர் கடன் அறவீட்டு நிலுவை ரூபா 517,803 அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைகள் அறவிடப்பட வேண்டும் | பதிவழித்தலுக்காக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சிற்கு விண்ணப்பம் அனுப்பப்பட்டுள்ளது. |
| (viii) | ஊழியர்களிற்கு பயிற்சியளிப்புக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில் ரூபா 168,408 அல்லது 15 சதவீதம் பயன்படுத்தப்படாமல் இருந்தது. | பயிற்சி வகுப்புக்கள் தொடர்பான ஒதுக்கீடு சரியாக மேற்கொண்டு முழுமையாக பயன்படுத்த வேண்டும் | வருட இறுதியில் பயிற்சி வகுப்புக்கள் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பட்ட கடும் வெள்ளப்பெருக்கு காரணமாக பயிற்சி வகுப்புக்கள் நடாத்த முடியாமல் போனமையால் ரூபா 168,408 பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. |
| (ix) | மீளாய்வாண்டுக்கான மீண்டெழும் செலவில் செலவினத்தலைப்புக்கள் 1003, 1403, 1203 இல் முறையே ரூபா 7,379,051, ரூபா 102,955, ரூபா 25,000 தொகையானது பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. இது தேறிய ஏற்பாட்டின் முறையே 14, 9, 11 சதவீதமாக காணப்பட்டது. | ஒதுக்கீடுகள் முமையாக பயன்படுத்த வேண்டும் | 1003 - சில அலுவலர்கள் சம்பளமற்ற விடுமுறை மற்றும் அரைச்சம்பள விடுமுறை பெற்றுக் கொண்டமையால் இவ் மேலதிகம் ஏற்பட்டுள்ளது.<br><br>1403 - அலுவலர்களால் புகையிரத ஆணைச்சீட்டுக்கள் எதிர்பார்த்த அளவு பயன்படுத்தப்படவில்லை.<br><br>1203 - அலுவலக |

| | | |
|---|---|---|
| | | பணியாளர்களின் தரத்தில் ஏற்பட்ட மாற்றமும் இரு பணியாளர் ஓய்வூதியம் பெற்றுச் சென்றமை. |

**3. மனித வள முகாமைத்துவம்.**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செயலகத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினர் 533 ஆகவும் உள்ளபடியான ஆளணியினர் 469 ஆகவும் காணப்படுவதுடன் 69 பதவியணியினர் வெற்றிடமாகவுள்ளதுடன் 05 ஆளணியினர் மிகையாகவும் காணப்படுகின்றது. | வெற்றிடமாகவுள்ள அவசியமான பதவிகளுக்கு ஆளணியினரை ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கோரிக்கை விண்ணப்பம் அனுப்பப்பட்டுள்ளதுடன் உரிய அமைச்சுகளுடன் கலந்துரையாடப்பட்டுள்ளது |
| (ஆ) | கண்டாவளைப் பிரதேச செயலகத்திற்கான பிரதேச செயலாளர் பதவி மற்றும் 5 நிர்வாக உத்தியோகத்தர்கள் பதவிகள் நிரப்பப்படாமல் உள்ளது. | வெற்றிடமாகவுள்ள அவசியமான பதவிகளுக்கு ஆளணியினரை ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கோரிக்கை விண்ணப்பம் அனுப்பப்பட்டுள்ளதுடன் உரிய அமைச்சுகளுடன் கலந்துரையாடப்பட்டுள்ளது |